9. அறிவிப்புகள்

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்–கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்காக பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), அவை உரிமைக் குழு (Committee of Privileges) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 2018 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 4 ஆம் நாள், புதன்கிழமை நண்பகல் 12–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள், 2018 ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 4 ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 4–00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2018 ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 5 ஆம் நாள், வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிற்பகல் 12–45

(ஆ) தமிழ்நாடு காமன்வெல்த் பாராளுமன்ற தமிழகக் கிளையின் சிறப்புப் பொதுக் குழுக் கூட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு காமன்வெல்த் பாராளுமன்ற தமிழகக் கிளையின் சிறப்புப் பொதுக் குழுக் கூட்டம் 4–7–2018 புதன்கிழமை மாலை 4–00 மணியளவில் சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கான விடுதியில் அமைந்துள்ள குழுக் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2018 ஜூன் 28

இச்சங்கத்தில் உறுப்பினரல்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களை உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள விரும்பினால், ஆயுட்கால சந்தாத் தொகையான ரூ.1,500/–ஐ சட்டமுன்வடிவு பிரிவு 2–ல் செலுத்தி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4–7–2018 அன்று நடைபெறவுள்ள காமன்வெல்த் பாராளுமன்ற தமிழகக் கிளையின் சிறப்புப் பொதுக் குழுக் கூட்டத்தில் காமன்வெல்த் பாராளுமன்ற தமிழகக் கிளையின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கமிட்டியில் நானும் நிறைய நாட்களாக இருந்திருக்கிறேன். மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்தில், எங்களை அனுப்பி வைத்தார்கள். எல்லா கட்சிக்காரர்களையும் சேர்த்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதற்குத்தான் இப்போது சிறப்புப் பொதுக் குழுவைக் கூட்டியிருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் வந்து கலந்து கொண்டீர்களென்றால், உங்களுடைய கருத்துகளை அங்கே சொல்லலாம். அங்கே நாம் முடிவுகளை எடுக்கலாம்.

திரு. துரைமுருகன்: நான்கு பேரை வைத்து இங்கேயே முடிவு செய்யலாமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் எல்லோரும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் நீங்கள் என்ன பேசுகிறீர்களோ, பேசி என்ன தீர்மானம் கொண்டு வருகிறீர்களோ அதை நிறைவேற்றலாம். பெரிய இடம் இருக்கிறது; தாராளமாக இருக்கும். அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வைக்கிறோம். (சிரிப்பு)